**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.57/2025 - PW-1**

| | |
|---|---|
| Name | திரு.வெங்கடேசன் |
| Husband/Father Name | கிருஷ்ணமூர்த்தி |
| Village /Area | அடுக்கம்பாறை |
| Taluk | வேலூர் |
| Occupation | முதல் நிலை காவலர் |
| Age | 36 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 23.03.2026.

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் தற்போது நெமிலி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 17.03.2025ம் தேதி காலை 10 மணிக்கு குற்ற தடுப்பு நடவடிக்கைகாக மற்றும் குட்கா சம்மந்தமாக ரோந்தில் ஈடுப்பட்டு கொண்டிருக்கும்போது என்னுடன் PC639 தங்கராஜ் மற்றும் உதவி ஆய்வாளர் பாலாஜி ஆகியோர் அரக்கோணம் பஜாரில் ரோந்தில் இருந்தோம். ரகசிய புலனாய்வு தகவலின் படி மார்க்கெட் அரசு மதுபான கடையிடம் ஒரு நபர் சுமார் 2அடி நீளமுள்ள வீச்சுருவாளை வைத்து கொண்டு அவ்வழியாக செல்லும் பொது மக்களை அச்சுறுத்தி கொண்டும் ரகளையில் ஈடுப்பட்டு கொண்டிருந்தார். இவரை பிடிக்காவிட்டால் பொது மக்களின் உயிருக்கு ஆபத்து நேரிடும் என்பதால் காலை 10.15 மணிக்கு அவரை செய்வதற்கான காரணத்தை கூறி கைது செய்து, அவரை கைது செய்ததை அவரது பெற்றோருக்கும் மற்றும் மாவட்ட அதிகாரிகளுக்கும் தகவல் தெரிவித்துவிட்டு அவராக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 10.15 முதல் 11.15 வரை ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டு அவராக எடுத்து ஆஜர் செய்த சுமார் 2 அடி நீளமுள்ள வீச்சறுவால் ஒன்றை 11.20 மணிக்கு கைப்பற்றி நானும் என்னுடனிருந்த காவலரும் ஒப்புதல் வாக்குமூலத்திலும் கைப்பற்றுதல் மகஜரிலும் சம்பவ இடத்திலேயே கையொப்பம் இட்டு எதிரியை 12.30 மணிக்கு நிலையம் அழைத்து வந்து வழக்கு பதிவு செய்தோம். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்டுகிறது. நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல்

மகஜரிலுள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்டுகிறது. நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் வீச்சருவாளை தான் ஆஜர் எதிரி எங்கள் முன்னிலையில் எடுத்து ஆஜர் படுத்தினார். அது **சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் ஆகாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.03.23 18:48:59 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.